1981 மே 6]

மதுரை நீதிமன்றத்திற்கருகிலுள்ள அண்ணா சிலையை செப்பனிடும் பணி.

*வினா எண் 995—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நீதிமன்றத்திற்கு அருகில் பழுதடைந்துள்ள அண்ணா சிலையை செப்பனிடும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மதுரை நீதிமன்றம் அருகில் பழுதடைந்துள்ள அண்ணா சிலை செப்பனிடப்பட்டு தங்க வண்ணம் பூசி 25—3—1981-க்கு முன்னதாக வேலைகள் முடிக்கப்பட்டு விட்டன.

[முற்பகல் 9-20]

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலைகளை நிறுவுவதற்கு முன்பாகவே, அவைகள் நீண்ட நாட்கள் நிலைத்து நிற்கவும், அடிக்கடி பழுதுபடாமல் இருக்கவும் தேவையான நல்ல யோசனைகளை அளிக்கும் பொருட்டு சிலைகள் பராமரிப்புக் குழு ஒன்று அமைக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த எண்ணங்களை எல்லாம் கருத்தில் கொண்டுதான், அதை நிறுவுவதற்கு முன் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பின்னால் அவைகள் ஒரு வேளை பழுது பட்டால், அவைகளை பழுது பார்ப்பதிலே காலதாமதம் ஏற்படுவதற்கு வேண்டுமானால் வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விருத்தாசலம் எண்ணெய் பிழியும் ஆலை.

*வினா எண். 996—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் விருத்தாசலம் 1976 ஆம் ஆண்டு சூரிய காந்தி எண்ணெய் பிழியும் ஆலை 60 இலட்ச ரூபாய் மதிப்பில் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டு சூரிய காந்தி விதை கிடைக்காத காரணத்தினால் மணிலாப் புழிரை அரைத்து எண்ணெய் எடுக்க 3 ஆண்டுக்கு அனுமதி அளித்தது அரசுக்குத் தெரியுமா?